<u>அவசரக்கூட்டம்</u>

**2023ம் ஆண்டு ஏப்ரல் 3ம் தேதி திங்கள்கிழமை காலை 11.30 மனிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் அவசரக்கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.**

**தலைமை.திரு.ச.ஜெயமூர்த்தி, நகர்மன்ற தலைவர்,**
**கோட்டக்குப்பம் நகராட்சி**

**பொருள் எண்:1**

கோட்டக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான மீன் அங்காடி பழுதடைந்து இருந்ததால் 2020 - 2021ல் ஆண்டில் புரனமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஏலம் விட முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் மேற்படி மீன் அங்காடியினை அகற்றிவிட்டு, புதிய நகராட்சி அலுவலகம் கட்டிடம் கட்ட பரிசிலனையில் இருந்ததால் 2021 - 2022ம் ஆண்டிற்கு பொது ஏலம் விடப்படவில்லை, மேலும் துறைரிதியாகவும் வசூல் செய்யப்படவில்லை. புதிய அலுவலக கட்டிடம் கட்ட இதுவரை முடிவுகள் எட்டாப்படாத நிலை உள்ளது, மேலும் மீன் அங்காடியினை பொது ஏலம் மற்றும் துறைரிதியாக வசூல் செய்யததால் வருவாய் இழப்பு ஏற்படுவதாக 2021 – 2022ம் ஆண்டு தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே நகராட்சியின் வருவாய் ஈட்டும் பொருட்டு மீன் அங்காடிக்கு பொது ஏலம் நடத்தி ஏலம் ஊர்ஜிதம் செய்யும் வரையில், கீழ்கண்ட விபரப்படி துறை ரீதியாக நகராட்சி பணியாளர் மூலம் தினசரி வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. மீன் விற்பனையாளர் - ரூ. 20/– (நபர் 1க்கு நாளொன்றுக்கு)
2. மீன் வெட்டுபவர்கள் - ரூ. 10/– (நபர் 1க்கு நாளொன்றுக்கு)

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.533/2023/அ1)

**பொருள் எண்.2**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, பெரியத்தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடையினை இரும்பை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டுப்பாட்டில் செயல்படும் நியாயவிலைக்கடைக்கு பயன்படுத்திட கேட்டு 22.11.2022 கடிதம் வரப்பெற்றது.

தற்போது பெரியத்தெருவில் உள்ள நகராட்சி கடை எண்.1–யினை வாடகைதாரர் திரு.அய்யுப் என்பவர் முழு வாடகை தொகையினை நிலுவையின்றி செலுத்தி கடை நடத்த விருப்பம் இல்லை என தெரிவித்து நகராட்சிக்கு ஒப்படைத்துள்ளார். மேற்படி கடையை பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்யும் வாடகையை நகராட்சிக்கு செலுத்திட ஒப்புதல் கடிதம் அளித்தால் இது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று விதிகளின்படி தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என இரும்பை தொடக்க வேளாண்மை, கூட்டுறவு கடன் சங்கத்திற்கு கடிதம் அனுப்பட்டு நடவடிக்கையில்

உள்ளது. மேற்படி கடை எண் 01க்கு ஏப்ரல்–2023 முதல் கேட்பு நிர்ணயம் செய்வதில் இருந்து விலக்கு அளித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.672/2022/எப்1)

**பொருள் எண்.3**

கோட்டக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான மீன் அங்காடி பின்புறம் உள்ள வணிக வளாக கடை எண்.2 மற்றும் 4–னை கடை வாடகைதாரர் 30.03.2023 அன்று திரும்ப ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலையில் காலியாக உள்ள இரண்டு கடைகளையும் பொது ஏலம் நடத்திடவும் மற்றும் பொது ஏலம் முடித்து ஏலம் ஊர்ஜிதம் செய்யும் வரை மேற்படி கடை எண் 01 மற்றும் 4க்கு ஏப்ரல்–2023 முதல் கேட்பு நிர்ணயம் செய்வதில் இருந்து விலக்கு அளித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.534/2023/அ1)

**பொருள் எண்.4**

கோட்டக்குப்பம் நகராட்சி 9.59சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 40142 மக்கள் தொகையுடன் 8981 குடியிருப்புகளுடன் 27 வார்டுகளை கொண்ட வளர்ந்து வரும் நகரப்பகுதியாகும். இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து குடியிருப்புப் பகுதிகள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றில் நாள் ஒன்றுக்கு 10 முதல் 12 டன் வரை குப்பையை இப்பகுதிவாழ் மக்களால் வெளியேற்றப்படுகிறது. இவற்றை இந்நகராட்சி துப்புரவு பணியாளர்கள் கொண்டு கையாளுவது மிக சிரமமாக உள்ள காரணத்தால் தினசரி பொது மக்களால் உற்பத்தி செய்யப்படும் திடக்கழிவுகளை மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள் என தரம் பிரித்து வாங்குதல், ஹாட் ஸ்பாட்டுகளிலிருந்து எடுத்து வரப்படும் திடக்கழிவுகளை பிரித்தல், வளம் மீட்பு பூங்காவில் இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயார் செய்தல், திடக் செய்வதில் இருந்து கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் திறம்பட செய்யும் பொருட்டு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சியில் 14 நிரந்தர துப்புரவு பணியிடங்கள் மட்டுமே உள்ளன. இப்பணியாளர்களை கொண்டு பொது சுகாதார பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. ஆகையால் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது குழுவில் உள்ள நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு தற்போது ரூ.310/– வீதம் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி ஊதியத்தினை கொண்டு குடும்ப நடத்திடவும், பிள்ளைகளின் படிப்பு செலவு, மருத்துவ செலவு ஆகியவற்றை சமளிப்பது மிகவும் சிரமமாக உள்ளது, மேலும் மழை கடும் வெயில் என்று பாராமல் நாங்கள் எங்கள் பணியினை செய்து வருகிறோம் மேலும் கொரோனா காலத்தில் எங்களின் பணியினை அனைவரும் பாராட்டினார்கள். இப்படி அயராது பணி செய்து வரும் எங்களின் குடும்ப கஷ்டத்தினை கருதில் கொண்டு ஊதியத்தினை உயர்த்தி வழங்க கோரி 08.02.2023 அன்று கடிதம் அளித்துள்ளனர். மேற்கண்ட சுய உதவிக்குழு பணியாளர்கள் கோரிக்கை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ. மன்றம் அனுமதிக்கலாம்

ஆ.தற்போது வழங்கப்படும் ஊதியம் ரூ.310/-லிருந்து ரூ.350/-ஆக ஊதியத்தினை 01.04.2023 முதல் உயர்த்தி வழங்கலாம்.

(ந.க.எண்.535/2023/எச்1)

**பொருள் எண்: 5**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு அடிக்கடி ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலவில்லை, மேலும் பொது சுகாதார பணிக்கு, வடிகால் பராமரிப்பு பணிகள், சாலை மேம்பாடு செய்தல் மற்றும் பொது இடங்களை சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு வாடகை JCB இயந்திரம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுகிறது. ஆகையால் நிதி இழப்பினை கருத்தில் கொண்டு புதியதாக ஜெ.சி.பி. இயந்திரம் ஒன்று இந்நகராட்சி வருவாய் நிதியில் தோராய மதிப்பீடு ரூ.39.00/- (ரூபாய் முப்பத்தொன்பது இலட்சம் மட்டும்) கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.536/2023/இ1)

**பொருள் எண்: 6**

கோட்டக்குப்பம் நகராட்சியில் உள்ள நகர்மன்றக் கூடம் பழுதடைந்து அமர்வதற்கு நாற்காலி மற்றும் மேசைகள் வசதிகள் அற்ற நிலையில் இருப்பதால், மாதாந்திர நகர்மன்றக் கூட்டம் நடத்துவதற்கு நாற்காலிகள் மற்றும் மேசைகள் வாடகைக்கு பெறப்பட்டு கூட்டம் நடத்தப்படுகிறது. ஆகையால் நகர்மன்ற கூட்ட அரங்கினை பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு புதிய நாற்காலிகள், மேசைகள், ஒலி பெருக்கி வசதி மற்றும் குளிர்சாதன வசதிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.19.00/- (ரூபாய் பத்தொன்பது இலட்சம் மட்டும்) இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ. மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. 20.03.2023 அன்று நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி
பெற்று நடவடிக்கை மேற்கொண்டது மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.537/2023/இ1)